# தொடரும் தி.



"யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம், அப்பப்பா பூமியிலே எல்லாம் வஞ்சம்" என்று பாடியபடியே உள்ளே நுழைந்த சாலமன், நித்யானந்தா பற்றிய நமது கவர் ஸ்டோரியைப் படித்தார். "இந்தக் காலத்திற்கும் பொருந்தும்படி அந்தக் காலத்திலேயே பாடி வைத்துவிட்டார்கள். மக்கள்தான் உஷாராக இருக்க வேண்டும்" என்றவர், கொண்டு வந்த செய்திகளை நமது காதுகளில் கொட்டத் தொடங்கினார்.

"துணை முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாள் விழா களைகட்டியது. அதிகாலை 5 மணிக்கே பிறந்த நாள் கொண்டாட்டங்கள் அரங்கேறத் தொடங்கிவிட்டன. தனது தந்தையான முதல்வர் கருணாநிதியிடம் வாழ்த்துக்களைப் பெற்று, தன் பிறந்த நாள் நிகழ்ச்சிகளைத் தொடங்கிய ஸ்டாலின், எப்போதையும் விட இந்தப் பிறந்த நாளில் மிகவும் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருந்தார். 'அவர் வருவாரா?' என்று ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளுடன் மத்திய அமைச்சர் அழகிரிக்காக காத்திருந்தது கூட்டம். 'தனக்கு நன்றி தீர்மானம் போடவில்லை' என்ற கோபத்தில் பொதுக்குழுவிலிருந்து வாக்-அவுட் செய்தார் அழகிரி. அப்போது தன்னை வழியனுப்ப வந்த அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம், 'யார் வேண்டுமானாலும் என்னை மதுரையில் வந்து பார்க்கட்டும்' என்று கூறிவிட்டுச் சென்றிருந்தார் அழகிரி. ஆகவேதான், 'அவர் வருவாரா? மாட்டாரா?' என்ற கேள்வி எழுந்தது. ஆனால் அழகிரியும் வந்தார்! ஸ்டாலினுக்கு பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னார்"

"அப்படியா?"

"அவருக்குப் பிறகு கனிமொழி வந்தார். அதன் பிறகு தயாளு அம்மாளை அழைத்துக் கொண்டு 'சன் பிரதர்ஸ்' வந்தார்கள். திருவண்ணாமலை ஆசிரமத்தில் இருந்து ஐந்து வெள்ளைக்கார ஆண்களும், பெண்களும் வந்து ஸ்டாலினை வாழ்த்தியது வித்தியாசமாக இருந்தது. ஊனமுற்றவர்கள் வந்து ஸ்டாலினை வாழ்த்திய போது அவர்களிடம் மிகவும் பரிவு காட்டிய ஸ்டாலின், தன்னிடமிருந்த சால்வைகளை அவர்களுக்கு அணிவித்து மகிழ்ந்தார். அன்றைய தினம் முதலில் வாழ்த்து சொன்ன போலீஸ் அதிகாரி வடக்கு மண்டல ஐ.ஜி.யாக இருக்கும் துரைராஜ். பிறகுதான் மற்ற போலீஸ் அதிகாரிகள் வாழ்த்துச் சொன்னார்கள்" என்ற சாலமன், நாம் கொடுத்த ஆப்பிள் ஜூஸைக் குடித்துவிட்டுத் தொடர்ந்தார்.



தம்பித்துரை



சத்தியமூர்த்தி

"துணை முதல்வர் ஸ்டாலினுக்கு வாழ்த்துச் சொல்லி விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார் சமீபத்தில் தி.மு.க.வில் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தி. பால்வளத்துறை அமைச்சர் மதிவாணன் வீட்டிற்கு அருகில் வரும் போது அவருடைய கார் பஞ்சர் ஆகிவிட்டது. பஞ்சர் போடச் சொல்லிவிட்டு அப்படியே அமைச்சரின் வீட்டு காம்பவுண்டிற்குள் நின்றார் சத்தியமூர்த்தி. இதைப் பார்த்த அமைச்சர் மதிவாணனின் ஊழியர்கள், 'ஏன் இங்கு வெயிட் பண்ணுகிறீர்கள்? உள்ளே வந்து அமருங்கள்' என்று கூறியிருக்கிறார்கள். அதன்படி அவரும் அமைச்சர் வீட்டிற்குள் வந்தார். இதைக் கேள்விப்பட்ட அமைச்சர் மதிவாணன் அவரை வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் சென்று காபி கொடுத்து உபசரித்தார். கார் பஞ்சர் போடும் வரை அங்கே பேசிக் கொண்டிருந்து விட்டு விடைபெற்றார் முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தி. இந்த சந்திப்பின்போது மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி.சேகரும் உடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது"

"பென்னாகரம் இடைத்தேர்தல் குறித்து ஏதேனும் நியூஸ் உண்டா?"

"சொல்கிறேன். 'பென்னாகரம் இடைத்தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது?' என்று ஒரு கேள்வியை எழுப்பி, 'அனைவரும் எழுத்து பூர்வமாக பதில் சொல்லுங்கள்' என்று மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அறிவித்தார் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சரத்குமார். இதைத் தொடர்ந்து அங்கிருந்த 15 மாவட்டச் செயலாளர்களில் 9 பேர் 'நாம் போட்டியிடவில்லை என்று அறிவித்தால் மட்டும் போதும். யாருக்கு ஆதரவு என்பதை அறிவிக்க வேண்டாம்' என்றார்களாம். மீதியுள்ள 6 மாவட்டச் செயலாளர்களோ, 'நாம் போட்டியிடவில்லை என்று அறிவிப்போம். அதே மாதிரி தி.மு.க.விற்கு ஆதரவு என்றும் அறிவிப்போம்' என்றார்களாம். 'ஏன் தி.மு.க. ஆதரவு என்று அறிவிக்க வேண்டும்?' என்று சரத்குமார் கேள்வி எழுப்ப, 'ஏற்கனவே நம் தொண்டர்கள் சோர்வாக இருக்கிறார்கள். தி.மு.க. ஆதரவு என்று அறிவித்தால் நம் கட்சியில் உள்ளவர்கள் ஆளுங்கட்சியுடன் இருக்கிறோம் என்று உற்சாகம் அடைவார்கள். குறைந்தபட்சம் நம் கட்சிக்காரர்களுக்கு ஏதாவது போலீஸ் ஸ்டேஷனில் பிரச்சினை என்றால் மதிப்பாவது கொடுப்பார்கள் அல்லவா?' என்றார்களாம். இதன் பிறகு 'பாராளுமன்றத் தேர்தல் போல் நாம் தனிமைப்பட்டு விட மாட்டோம் என்பதை மட்டும் உங்களுக்கு எல்லாம் உறுதிமொழியாகச் சொல்ல விரும்புகிறேன்' என்று கூட்டத்திற்கு வந்திருந்த கட்சி நிர்வாகிகளை குஷிப்படுத்தி அனுப்பி வைத்தாராம் சரத்குமார்.

இவர்கள் குஷியாக இருக்க, அ.தி.மு.க. பூத் பொறுப்பாளர்களோ தலைமைத் தேர்தல் பொறுப்பாளர் தம்பித்துரையைப் பார்த்தால் ஓடி ஒளிகிறார்களாம்"

"ஏன்?"

"ஒவ்வொரு பூத் பொறுப்பாளரும் அந்த பூத்திற்கு ஆகும் செலவுத் தொகையில் 5 லட்சம் ரூபாயைக் கொடுக்க வேண்டும் என்பது கட்சித் தலைமையின் உத்தரவு' என்று